# செய்தி வெளியீடு

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் நடைபெற்ற "ஏற்றுமதியில் ஏற்றம் – முன்னணியில் தமிழ்நாடு" – தமிழ்நாடு ஏற்றுமதி மாநாடு விழா

இந்தியத் திருநாட்டின் 75வது சுதந்திர தினத்தினைக் கொண்டாடும் வகையில் நாடு முழுவதும், 20.09.2021 முதல் 26.09.2021 வரை "வர்த்தகம் மற்றும் வணிக வாரம்" கொண்டாடப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டினைப் பொறுத்த வரையில், மாநிலத்தின் ஏற்றுமதித் திறனை வெளிப்படுத்தும் வகையில், இன்று (22.09.2021), சென்னை கலைவாணர் அரங்கத்தில், **"ஏற்றுமதியில் ஏற்றம் – முன்னணியில் தமிழ்நாடு"** – தமிழ்நாடு ஏற்றுமதி மாநாடு சிறப்பாக நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில், தமிழ்நாடு அரசுத் துறைகள், ஒன்றிய அரசின் வர்த்தகத் துறை, ஏற்றுமதியாளர்கள், தொழில் முனைவோர், தொழில் அமைப்புகள், ஏற்றுமதி மேம்பாட்டு மையங்கள், மற்றும் ஏற்றுமதி தொடர்புடைய வணிகர்கள் என்று ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்ச்சியின் சிறப்பு அம்சங்களாக, கீழ்க்கண்ட நிகழ்வுகள் நடைபெற்றன:–

- தமிழ்நாடு ஏற்றுமதி மேம்பாட்டுக் கொள்கை வெளியீடு
- குறு, சிறு மற்றும் நடுத்தர ஏற்றுமதி நிறுவனங்களுக்கான கையேடு வெளியீடு

- 2120.54 கோடி ரூபாய் முதலீட்டில் 41,695 நபர்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கிடும் வகையில் 24 தொழில் முதலீடுகளுக்கு புரிந்துணர்வு ஒப்பந்தம்
- புதியதாக அமைக்கப்பட்டுள்ளள பாலிமர் பூங்காவில் நில ஒதுக்கீடு ஆணைகள் வழங்கல்
- தமிழ்நாட்டில் முதல் முறையாக Cotton Corporation of India மூலம் பஞ்சுக் கிடங்குகள் அமைத்திட ஆணை வழங்கல்

முன்னதாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 21 ஏற்றுமதி நிறுவனங்கள், ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனங்கள் மற்றும் அரசு நிறுவனங்கள் பங்கேற்ற **ஏற்றுமதிக் கண்காட்சி** யினை துவக்கி வைத்தார்கள். இந்த ஏற்றுமதிக் கண்காட்சியில், தமிழ்நாட்டில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களை காட்சிப்படுத்திய 42 கண்காட்சி அரங்குகள் தவிர, ஆன்லைன் மூலம் ஏற்றுமதியாளர் – இறக்குமதியாளர் குறியீடு (IEC) எடுக்க விரும்புவோருக்கு Spot Registration செய்திடும் வகையில், கண்காட்சி அரங்கிலேயே ஒரு Kiosk அமைக்கப்பட்டு இருந்தது.

## புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில், தொழில் துறை சார்பில் 1880.54 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 39150 நபர்களுக்கு வேலைவாய்ப்பு என்ற வகையில் 14 நிறுவனங்களும், சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் சார்பில் 240 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 2545 நபர்களுக்கு வேலைவாய்ப்பு என்ற வகையில் 10 புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் மேற்கொள்ளப்பட்டன.

அதன் விவரங்கள் பின்வருமாறு:–

**தொழில் துறை சார்பில் கையெழுத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் (14) :–**

| வ. எண் | நிறுவனம் | உற்பத்திப் பொருள் / துறை | முதலீடு ரூ. கோடிகளில் | வேலை வாய்ப்பு | இடம் |
|---|---|---|---|---|---|
| 1 | Ramaraju Surgicals | ஜவுளி | 425 | 1600 | கங்கைகொண்டான், திருநெல்வேலி |
| 2 | Kanam Latex | Latex கையுறைகள் | 310 | 1600 | AMRL SEZ திருநெல்வேலி |
| 3 | Pinnacle Infotech | தகவல் தொழில் நுட்ப சேவைகள் | 286.34 | 3600 | ELCOT, மதுரை |
| 4 | Mohib Group | தோல் பொருட்கள் மற்றும் காலணிகள் | 225 | 23175 | ஆம்பூர் |
| 5 | UC World Online Limited | ஜவுளி தொழில் பூங்கா | 130 | 4000 | தூத்துக்குடி |
| 6 | Rubfila International Ltd | பொது உற்பத்தி | 100 | 200 | திண்டுக்கல் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 7 | Tyromer Technology Pvt Ltd | Devulcanized ரப்பர் மறுசுழற்சி | 100 | 100 | செங்கல்பட்டு. |
| 8 | Shakthi Steels Industries | எஃகு உற்பத்தி | 69.2 | 825 | பர்கூர் |
| 9 | Issac Boilers Ltd | கொதிகலன் உற்பத்தி | 50 | 100 | நாங்குநேரி, திருநெல்வேலி |
| 10 | Varsha Stones International | பொது உற்பத்தி | 50 | 50 | கிருஷ்ணகிரி |
| 11 | KH Exports India Pvt. Ltd | தோல் பொருட்கள் உற்பத்தி | 50 | 2500 | ராணிப்பேட்டை |
| 12 | BBK Group | காலணிகள் உற்பத்தி | 35 | 1000 | ராணிப்பேட்டை |
| 13 | Emerald Resilient Tyre Mfg Pvt Ltd | டயர்கள் | 30 | 300 | கும்மிடிப்பூண்டி |
| 14 | Sonkam Stones | பொது உற்பத்தி | 20 | 100 | மதுரை |
| **மொத்தம்** | | | **1880.54** | **39150** | |

**சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் துறை சார்பில் கையெழுத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் (10):–**

| வ. எண் | நிறுவனம் | உற்பத்திப் பொருள் / துறை | முதலீடு ரூ. கோடிகளில் | வேலை வாய்ப்பு | இடம் |
|---|---|---|---|---|---|
| 1 | Precision Machine and Auto Components Pvt. Ltd | கனரக மோட்டார் வாகன உதிரிபாகங்கள் | 50 | 300 | திருவள்ளூர் |
| 2 | SVN Exports | உணவு பொருட்கள் | 40 | 70 | தஞ்சாவூர் |
| 3 | Bapuji Surgicals | மருத்துவ மற்றும் சுகாதார பொருட்கள் | 35 | 250 | கிருஷ்ணகிரி |
| 4 | KRR | ஆலை | 25 | 400 | சென்னை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | Engineering Pvt Ltd | உபகரணங்கள் | | | |
| 5 | Tucker Motor EV | மின்சார வாகனங்கள் மற்றும் சார்ஜ் செய்யப்பட்ட பேட்டரிகள் | 20 | 200 | மதுரை |
| 6 | Axiogen Biotech | Agricultural Organic Fertilizers | 20 | 100 | காஞ்சிபுரம் |
| 7 | Shree MRN Export | Granite Monuments | 20 | 40 | சேலம் |
| 8 | JK Safety Gear Company | Leather Sports and Industrial Shoes | 10 | 500 | கிருஷ்ணகிரி |
| 9 | Amaryllis Healthcare Pvt. Ltd | மருத்துவ மற்றம் சுகாதாரப் பொருட்கள் | 10 | 400 | கிருஷ்ணகிரி |
| 10 | Creative Hands India Pvt Ltd | அறைகலன்கள் | 10 | 285 | திருச்சிராப்பள்ளி |
| **மொத்தம்** | | | **240** | **2545** | |

**மொத்தத்தில், மேற்கூறிய 24 திட்டங்களில் உறுதி செய்யப்பட்டுள்ள முதலீடு 2120.54 கோடி ரூபாய் மற்றும் வேலை வாய்ப்பு 41,695 நபர்கள் ஆகும்.** இந்த முதலீடுகள், ஜவுளி, இரசாயனங்கள், தகவல் தொழில் நுட்பம்/தகவல் தொழில் நுட்ப சேவைகள், எஃகுப் பொருட்கள், தோல், ஆடைகள், பொது உற்பத்தி உள்ளிட்ட பல்வேறு துறைகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த முதலீடுகள், சென்னை, காஞ்சிபுரம், திருப்பத்தூர், கிருஷ்ணகிரி, மதுரை, சேலம், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், தூத்துக்குடி, திண்டுக்கல் மற்றும் திருநெல்வேலி என்று பல்வேறு மாவட்டங்களில் பரவலாக மேற்கொள்ளப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

**மாண்புமிகு முதலமைச்சர் முன்னிலையில் இதர புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்**

1) குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு இ–காமர்ஸ் தளங்களில் பயிற்சி அளித்து, அந்நிறுவனங்களை, தேசிய சந்தைகளுக்கு மட்டுமின்றி, உலகளாவிய சந்தைகளுக்கும் தயார் செய்திடும் திட்டத்திற்காக, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் M–TIPB நிறுவனம், Flipkart / Walmart நிறுவனத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.
2) தமிழ்நாடு மற்றும் ஜெர்மனி நாட்டிற்கு இடையே, முதலீடுகள், தொழில் நுட்ப ஒத்துழைப்பு திட்டங்கள் மற்றும் ஏற்றுமதி வாய்ப்புகள் போன்றவற்றிற்காக இணைந்து செயல்படும் வகையில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் M–TIPB நிறுவனம், Indo German Chamber of Commerce உடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்ட தமிழ்நாடு ஏற்றுமதி மேம்பாட்டுக் கொள்கை யின் சிறப்பம்சங்கள்**

- 2030ம் வருடத்திற்குள் 100 பில்லியன் அமெரிக்க டாலராக ஏற்றுமதியை உயர்த்திட இலக்கு. இதற்காக ஏற்றுமதியை மேம்படுத்துதல் மற்றும் ஏற்றுமதி பன்முகப்படுத்தல் என்று இரு அணுகுமுறைகள் கடைபிடிக்கப்படும்.
- மாநிலம் முழுவதும் பரவலாக ஏற்றுமதி மேற்கொள்ளும் வகையில், மாநல்லூர் மற்றும் தூத்துக்குடிஆகிய இரண்டு இடங்களில்,

**பொருளாதார வேலைவாய்ப்புப் பகுதிகள் (Export Enclaves)** உருவாக்கம்.

- ஏற்றுமதி அதிகமாக மேற்கொள்ளும் பகுதிகளில், ஏற்றுமதி தொடர்பான பொதுவான உள்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்தப்படும். இதற்காக, மாநிலத்தில் **10 ஏற்றுமதி பகுதிகள் (Export Hubs)** அடையாளம் காணப்பட்டுள்ளது. ஒரு ஏற்றுமதி மையத்திற்கு தலா 10 கோடி ரூபாய் என்ற அளவில் 25% மானியம் அளிக்கப்படும்.
- மேலும், ஏற்றுமதியாளர்கள் மதிப்புக் கூட்டல் பொருட்களை உற்பத்தி செய்வதை ஊக்குவிக்கும் பொருட்டு, **தொகுப்புச் சலுகைகள் வழங்க ஒரு திட்டம் வடிவமைக்கப்படும்**.

## ஏற்றுமதியாளர்கள் கையேடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்காக **"ஏற்றுமதியாளர்களின் கையேட்டை"** வெளியிட்டார். இந்தக் கையேடு, பல்வேறு ஏற்றுமதி அனுமதிகள், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்குத் தேவையான செயல்முறைகள் பற்றிய விரிவான தகவல்களை எளிமையாகவும், சுருக்கமாகவும் வழங்கும்.

## பாலிமர் பூங்காவில் நில ஒதுக்கீடு ஆணைகள்

பொன்னேரி அருகில் உள்ள வாயலூரில், 240 ஏக்கர் பரப்பளவில், பாலிமர் தொழிற்சாலைகளுக்கு என பிரத்யேகமாக ஒரு தொழிற் பூங்கா அமைக்கப்பட்டுள்ளது. இந்தப் பாலிமர் பூங்காவில், முதல் 2

நிறுவனங்களுக்கு நில ஒதுக்கடு ஆணைகள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அளிக்கப்பட்டது.

## Cotton Corporation of India நிறுவனத்தின் பஞ்சுக் கிடங்குகள் அமைப்பதற்கான ஆணைகள்

பருத்தி, பஞ்சு மற்றும் கழிவுப் பஞ்சு மீது விதிக்கப்படும் 1% சந்தை நுழைவு வரியை நீக்க வேண்டும் என நெசவாளர்கள், தொழில் முனைவோர், நூற்பாலைகள், பஞ்சு உற்பத்தியாளர்கள், வியாபாரிகள் ஆகியோர் பல ஆண்டுகளாக கோரிக்கை வைத்து வந்தனர். இதன் காரணமாக, வெளி மாநிலத்தில் இருந்து தருவிக்கப்படும் பஞ்சின் விலை அதிகரித்ததோடு மட்டுமல்லாமல், Cotton Corporation of India போன்ற நிறுவனங்கள், தமிழ்நாட்டில் பஞ்சுக் கிடங்குகளை அமைக்க தயக்கம் காட்டி வந்தன. இந்நிலையில், இந்த 1% சந்தை நுழைவு வரியை தமிழ்நாடு அரசு தற்போது நீக்கி உள்ளது. இதன் விளைவாக, Cotton Corporation of India, தற்போது தமிழ்நாட்டில் பஞ்சுக் கிடங்குகள் அமைத்திட முன்வந்துள்ளது. இதற்கான ஆணைகளை, Cotton Corporation of India தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு தங்கம் தென்னரசு, மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர், திரு. தா. மோ. அன்பரசன், தலைமைச் செயலாளர் திரு. வெ. இறையன்பு, இ.ஆ.ப., ஒன்றிய அரசின் வணிகத் துறை கூடுதல் செயலாளர், திரு. சஞ்சய் சத்தா, தொழில் துறை முதன்மைச் செயலாளர், திரு. நா. முருகானந்தம், இ.ஆ.ப., தமிழ்நாடு தொழில் மேம்பாட்டு நிறுவனத்தின்

**தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு. பங்கஜ் குமார் பன்சல், இ.ஆ.ப., சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் தொழில் துறை செயலர், திரு அருண் ராய், இ.ஆ.ப., ஒன்றிய வர்த்தகத் துறையின் கூடுதல் இயக்குநர், திரு. சண்முக சுந்தரம், இ.ஆ.ப.,, வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி பூஜா குல்கர்ணி, இ.ஆ.ப., தொழில் வணிக ஆணையர் திருமதி சிஜி தாமஸ் வைத்யன், இ.ஆ.ப., அரசு உயர் அதிகாரிகள், ஏற்றுமதியாளர்கள், தொழில் நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் வெளிநாட்டு தூதரக அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.**

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை - 9